# கதிர்காமம் பிரதேச சபை
# மொனராகலை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 செப்தெம்பர் 10 ஆந் திகதிவரை சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 நவம்பர் 16 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 கொடுக்கல் வாங்கல், செயற்பாடுகள் செயலாற்றல் தொடர்பான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 152,109 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

#### 2.1.1 ஆதன வரி

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 140(5) இன் பிரகாரம் 1997 ஆம் ஆண்டின் பின்னர் ஆதன வரியைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் நிலுவை ஆதனவரி ரூபா 4,681,827 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாத இறுதியில் அப்பெறுமதி ரூபா 5,995,664 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிலுவை ஆதனவரி 28 சதவீத்தினால் அதிகரித்திருந்தது.

#### 2.1.2 வாடகை

(ஆ) 2011 ஆம் ஆண்டின் பெப்ரவரி தொடக்கம் 2012 ஏப்ரல் வரை நீதிமன்றத் தண்டப் பணத்தை தயார்படுத்துவதற்காக 04 உத்தியோகத்தர்களுக்கு ஒருவருக்கு ரூபா 10,000 படி செலுத்தப்பட்ட ரூபா 40,000 இற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறக்கட்டிருக்கவில்லை.

(இ) தலைவர், உறுப்பினர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் விழா மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படாது 03 சந்தர்ப்பங்களில் வாடகை வாகனத்திற்காக ரூபா 34,000 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

(ஈ) ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2012 சனவரி 25 ஆந் திகதிய 12/ஆ/061 ஆம் இலக்க மேலதிக எரிபொருள் கடிதத்தின் பிரகாரம் சபையின் PD 1846 ஆம் இலக்க கப் வாகனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையான 282 லீற்றரை விஞ்சி 2012 சனவரி தொடக்கம் ஒக்தோபர் வரையான காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட ரூபா 226,915 பெறுமதயிான 2012 லீற்றர் எரிபொருளுக்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படாது எல்ஈ 7479 ஆம் இலக்க கப் வாகனத்திற்கு புதிதாக எந்திரத்தைப் பொருத்துவதற்காக 2011 ஒக்தோபர் 08 ஆந் திகதி தனியார் காஜிற்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஓ) மற்றும் (ஔ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரின் முன் எழுத்துமூல அங்கீகாரம் இன்றி விழா மற்றும் கல்விச் செயற்பாடுகளுக்காக ரூபா 76,900 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(எ) 2012 சனவரி மாதத்திற்காக வாடகை வாகனத்தை ஈடுபடுத்தியதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 45,000 தொகை தொடர்பான கடமைப் பிரயாணம் தொடர்பான விபரம் மற்றும் அக்காலத்தில் வாகனம் ஈடுபடுத்தப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான எவ்வித எழுத்துமூல சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இக் கொடுப்பனவுகளுக்குரிய சாரதிகளின் கோரிக்கைக் கடிதங்களும் காணப்படவில்லை.

(ஏ) ஆதனவரி மதிப்பீடு செய்வதற்காக சமூகமளித்த உத்தியோகத்தருக்கு உரிய அங்கீகாரம் இன்றி 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 46,770 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) 2011 ஆம் ஆண்டின் போது 05 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட முற்பணமான ரூபா 404,000 தொகை அரசாங்க நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் தீர்க்கப்பட்டிருக்கவிவ்லை.

(ஐ) இலங்கை வங்கியின் 0052031707 ஆம் இலக்க கணக்கில் வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்த ரூபா 15,957 பெறுமதியான 5 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) சபைக்குரிய 09 வாகனங்களுக்காக சம்பவத் திரட்டுப் புத்தகம் பேணப்படாதிருந்ததுடன் ரூபா 312,495 தொகையான பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செலவினங்கள் நிதிப் பிரமாணம் 785(4) இன் பிரகாரம் சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(அ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்